**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

O.S.No.365 /2024 நாள்-10.04.2026

**வா.சா.2.முருகன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதியின் அக்கா மகளை நான் திருமணம் செய்துள்ளேன். வாதிக்காக ஒரு கிரைய ஆவணத்திலும் தாவா வழக்கு புரோநோட்டிலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.3-2ம் பிரதிவாதி, வாதியின் மனைவிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4- பணப்பற்று ரசீதிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1- வாதியின் மனைவி பிரதிவாதியுடன் செய்து கொண்ட கிரைய உடன்படிக்கையிலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் உறவினர் என்பதால் வாதி ஏற்படுத்தும் அனைத்து ஆவணங்களிலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். கடனுறுதிசீட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பமும், பணப்பற்று ரசீதில் உள்ள 2ம் பிரதிவாதியின் கையொப்பமும் வித்தியாசமாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டை நானும், வாதியும் சேர்ந்து மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் வாதியிடம் பிரதிவாதிகள் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்று மீண்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலம் முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ஏற்கனவே வாதியிடம் ரூ.1லட்சம் கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த கடன் கொடுக்க முடியாத சூழ்நிலையில் தான் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதியின் மனைவிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது ஆனால் அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் நான் செய்துள்ளேன். பொது அதிகார

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

ஆவணத்தின்படி அவரது கணவருடன் கிரைய உடன்படிக்கை மேற்கொண்ட விவரம் எனக்கு தெரியாது. கிரைய உடன்படிக்கை தொகையை 2ம் பிரதிவாதியிடம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அதற்காக தான் நான் வா.சா.ஆ.4-ல் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை பின்பு ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த சொத்தை யார் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி என் உறவினர் என்பதால் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் ஏற்கனவே ரூ.1 லட்சம் கடன் கொடுக்க முடியாத பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தின் படி சொத்தை எழுதிக் கொடுத்த பின்பு மீண்டும் ரூ.6 லட்சம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.